# தேர்தலொன்று நடைபெறுமாயின் முதல் சந்தர்ப்பத்திலேயே இந்த ஆட்சியாளர்களை மக்கள் வெளியேற்றிவிடுவார்கள்!

## தேசிய மக்கள் சக்தியின் நிர்வாக உறுப்பினர் கே. டி. லால் காந்த



மக்களது நிராகரித்தலின் மத்தியில் பதவிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அவரது ஆட்சிக் காலம் நொவம்பர் 17 அன்றுடன் முடிவடைந்து விடும்.

அதன்படி செப்டம்பர் 17 தொடக்கம் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கிடையில் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதித் தேர்தல் நடத்தியாக வேண்டும்!, என தேசிய மக்கள் சக்தியின் நிர்வாக உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒத்திவைப்பிற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வழங்குவதற்காக ஆதரவு தெரிவிக்கும் எம்.பி. க்கள் எதிர்காலத்தில் மக்களிடம் ஒளிந்து திரிய வேண்டிய நிலையே ஏற்படும், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவுகின்ற அநீதி முறையிலான ஆட்சியை முடிவிற்கு கொண்டு வருவதற்காக மக்கள் தேர்தலுக்காக காத்திருப்பதாகவும், தேர்தலொன்று நடைபெறுமாயின் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே மக்கள் இவர்களை வெளியேற்றிவிடுவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-04)

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 23 திங்கட்கிழமை 03.06.2024 கதிர் 274

# மக்களின் நிலைப்பாட்டைத் தான் வெளிப்படுத்தினேன் அரசியலமைப்பிற்கு முரணாக நான் எதுவும் கூறவில்லை!

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு



"தேர்தல்களைப் பிற்போடுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு அரசமைப்பின் ஊடாகச் செல்ல முடியும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் இன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நான் அரசியலமைப்பிற்கு முரணான எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை. அரசமைப்பில் இருக்கும் ஒரு சரத்து தொடர்பாகவே நான் கருத்து வெளியிட்டிருந்தேன்.

மக்கள் போராட்டத்திற்கு பின்னர், நாட்டை பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது செய்துவரும் வேலைத்திட்டங்களை பெரும்பாலான மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.


இவ்வாறான மக்களின் மனங்களின் உள்ள நிலைப்பாட்டைத்தான் நான் கூறினேன்.

2027 ஆம் ஆண்டில் பாரிய கடன் தொகையை செலுத்த வேண்டிய நிலைமையில் நாம் உள்ளோம்.

கடன் தொகையை செலுத்திய பின்னர், அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக இன்னும் பாரியளவு கடனை பெற வேண்டியுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் நாட்டை நாம் முன்னேற்ற வேண்டும்.

அந்தக் காலத்தில்தான் நாம் தற்போது இருக்கிறோம். அரசமைப்புக்கு இணங்க, மக்களுக்கு வாழும் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. சிலர் நான் கூறிய ☞2

# இரத்தினபுரியில் வெற்றி பெறுவது எமது உரிமை அது ஒரு சலுகை அல்ல என்கிறார் மனோ எம்.பி!



இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து கை தவறிப் போகும் தமிழ் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இம்முறை பெற்றே தீருவோம்!, என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட கட்டமைப்பு மாநாடு இரத்தினபுரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், ஒன்றேகால் இலட்சம் தமிழர் வாழும், எழுபத்தி ஐயாயிரம் தமிழ் வாக்காளர் வாழும் இரத்தினபுரியில் வெற்றி பெறுவது எமது உரிமை. அது ஒரு சலுகை அல்ல.

எனவே அடுத்த முறை எங்கள் வேட்பாளர் சந்திர குமார் இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பியாக வெற்றி பெற்று வருவார்.

இப்படி எமது கடும் உழைப்பினால் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களை நமது இனம் பெறுகின்ற சூழல் கூடி வரும் போது தமிழ் வாக்குகளை சிதறடிக்க ☞2

# ஜனாதிபதி ரணிலை இன்னும் 12 வருடங்களுக்கு ஆளவிடுங்கள் இலங்கையை ஆசியாவின் பலம் வாய்ந்த நாடாக மாற்றிடுவார்!

## ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன நம்பிக்கை



எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் எனவும், எமது நாட்டின் ஜனாதிபதியாவதற்கு மிகவும் பொருத்தமானவர் ரணில் விக்கிரமசிங்கவே எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் திறைசேரியில் பணம் இல்லாத காரணத்தினால் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற போது இலங்கையின் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. அந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வீழ்ச்சியடைந்திருந்த மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவது சவாலாக இருந்தது.

அந்தத்தியாகங்களின் முன்னேற்றத்தை இன்று நம் நாட்டின் ஒட்டுமொத்தப் பொதுமக்களும் அனுபவித்து வருகின்றனர். தற்போது நாட்டில் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டன. இன்று நீங்கள் வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை. உங்கள் பிள்ளைகள் பசியால் வாட மாட்டார்கள்.

ஒரு நாட்டை ஆள்வதற்கு ஒரு மூளைசாலி அவசியமாகும். அதனால் தான் நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூடவே இருந்து அவரை பாதுகாத்து வருகின்றோம். அவர் நாட்டை மீண்டும் மீட்டெடுப்பார் என்ற நம்பிக்கை இருந்ததாலேயே நாம் அவருடனேயே இருக்கின்றோம்.

அவர் இந்த நாட்டை மீட்டெடுப்பார் என்பது உறுதி. அதனால்தான் நான் சொல்கிறேன், அவரைத் தொந்தரவு செய்யாமல் 12 ஆண்டுகள் இந்த நாட்டை அவர் ஆள வழிவிடுங்கள். அவர் 12 வருடங்கள் இந்த நாட்டை வழிநடத்துவார் என்றால் இலங்கை ஆசியாவின் பலம் வாய்ந்த நாடாக மாறும். அதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம்" என்றார். (ரென-05)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் 10 ஆம் திகதி முதல் வழங்க நீதிமன்றம் உத்தரவு!

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 1700 ரூபா சம்பளத்தை வழங்கவேண்டும் என பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்தத் தீர்ப்பு மேன்முறையீட்டு நீதிமன்தினால் வழங்கப்பட்டுள்ளது.

(04)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கல்வி என்பது நிலையான சொத்து!

# மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற மாணவர் ஜெயசீலன் சுமன் கருத்து



கல்வி என்பது நிலையான சொத்து. அதை எப்போதுமே எம்மிடம் இருந்து எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, உயர்தரத்தில் கற்கும்மாணவர்கள்ஆசிரியர்களின் சொற்படி கேட்டு செயற்படும்போதே சிறப்பான நிலையை அடைய முடியும் - என உயிர் முறைமைகள் தொழிநுட்பப் பிரிவில் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற ஜெயசீலன் சுமன் தெரிவித்தார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஜெயசீலன் சுமன், உயிர் முறைமைகள் தொழிநுட்ப பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 28 வது இடத்தையும் பிடித்துள்ளார்.

தான் எதிர்காலத்தில் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தகவல் தொழிநுட்ப நெறிக் கற்கையை தெரிவுசெய்து கற்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வி முதல் சாதாரண தரம் வரை புற்றளை மகா வித்தியாலயத்தில் பயின்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த மற்றொரு மாணவனான செல்வச்சந்திரன் ஸ்ரீமன், பொறியியல் தொழிநுட்ப பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 10 ஆவது இடத்தையும் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த முன்னாள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தொகுதி அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ கரலியத்த ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார்.

சஜித் பிரேமதாசவின் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் தான் இணைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், திஸ்ஸ கரலியத்த ஐக்கிய மக்கள் சக்தியின் மதவாச்சி பிரதேசத்தின் இணை அமைப்பாளராக நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட உறுப்பினர் திலக் ராஜபக்ஷவும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார்.

திலக் ராஜபக்ஷ, அம்பகவெல்ல பிராந்திய வைத்தியசாலை மற்றும் அம்பாறை சுகாதார வைத்திய அதிகாரியாகவும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இரு தினங்கள் பாடசாலைகள் இயங்காது!



நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளையும் நாளை செவ்வாய் (ஜூன் 4) மற்றும் புதன்கிழமை (ஜூன் 5) ஆகிய இரு தினங்களும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நிலவும் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்தத் தீர்மானம் தொடர்பாக அவர் அறிவித்துள்ளார். (04)

## மக்களின் நிலைப்பாட்டைத்....

கருத்திற்கு எதிர்ப்பினை வெளியிட முடியும்.

எனினும், நான் அனைவரிடமும் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். தற்போது செயற்படும் இந்த வேலைத்திட்டங்களுக்கு ஓரணியாக இணைந்து ஒத்துழைக்கத்தயாரா? இதற்கு அனைவரும்இணங்கினால், இதற்காக மக்கள் ஆணையைக் கோருவது பிழையா? என்று நான் கேட்கிறேன்.

இன்று நாட்டில் இடம்பெறும் இந்த வேலைத்திட்டங்கள் நிறுத்தப்படுமானால், நாடு மீண்டும் பின்னோக்கி பயணித்துவிடும். எனவே, இந்த வேலைத்திட்டத்திற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது என்ற ஒரே நிலைப்பாட்டுடன் நாம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுப்போம்.

அப்படியில்லாமல், தங்களின் அதிகார ஆசைக்காக எவரேனும் ஒருவர்போட்டியிடுவாரானால், நாடு மீண்டும் பாதாளத்தில் விழுந்துவிடும். ஜனாதிபதி கொண்டுசெல்லும் இந்த வேலைத்திட்டம் இடையிலேயே நின்றுவிடுமோ என்ற அச்சம் மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடமும் அநுரகுமார திஸாநாயக்கவிடமும் அவர்களது வேலைத்திட்டங்களை பொது வெளியில் தெரிவிக்குமாறு கூறியும், இதுவரை பதில் இல்லை.

ஆனால், இன்றுவரை அப்படி நடக்கவில்லை. இவர்கள் எனது கருத்துக்கும் எந்தவொரு எதிர்ப்பினையும் வெளியிடவில்லை. எனவே, அவர்கள் எனது கருத்துக்கு எதிர்ப்பில்லை என்பதே இதிலிருந்து தெரிகின்றது, என்று குறிப்பிட்டுள்ளார். (04)

## இரத்தினபுரியில் வெற்றி பெறுவது.....

இப்போதே சிலர் திட்டம் போடுகிறார்கள். துரோகிகளான இவர்கள் தலைகளில் இடிதான் விழ வேண்டும்.

இந்நிலையில் மழை, வெள்ளத்துக்கு இடையிலும், இங்கே பெருந்தொகையில் கூடி இருக்கும் நீங்கள் இம்மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளில், அனைத்து தோட்டப் பிரிவுகளில், அனைத்து நகர பிரிவுகளில் அமைந்துள்ள எங்கள் அமைப்பாளர்களின் தலைமையிலான கட்சி வலைப் பின்னல் செயற்குழு உறுப்பினர்கள்.

உங்கள் பெயர்ப் பட்டியல் என்னிடம் இருக்கிறது. இது ஜனநாயக மக்கள் முன்னணியின் மாவட்டம் தழுவிய கட்டமைப்பு மாநாடு. இதுதான் எங்கள் அறிவார்ந்த அரசியல் பாணி" என்றும் குறிப்பிட்டுள்ளார். (04)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தாந்தாமலை மலைப் பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம்





(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கிலங்கையில் வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு மண்முனை தென்மேற்கு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப்பிள்ளையாருக்கான மகா கும்பாபிசேகம் இன்று நடந்தேறியது.

பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டன இந்த நிகழ்வில், தான் தோன்றி ஈஸ்வரர் ஆலய பிரதம குருவும் தாந்தாமலை முருகன் ஆலய பிரதம குருவுமான சிவசிறி மு.கு.சச்சிதானந்தக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கிரியைகளில் ஈடுபட்டனர். சரியாக 11.18 மணியளவில் பிரதான கும்பம் சொரியப்பட்டது. தொடர்ந்து ஏனைய பரிவார மூர்த்திகளுக்கான கும்பங்கள் சொரியப்பட்டன. ஆலய பரிபாலன சபை தலைவர் மு.அருணன் தலைமையிலான பரிபாலன சபையினர் கும்பாபிசேகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இதனை முன்னிட்டு கடந்த இரு நாட்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. குறித்த காலங்களில் விசேட பொதுப்போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

அடியார்களுக்கு ஆலய அன்னதான சபையினரால் அன்னதான ஒழுங்கும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# கல்முனையில் மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

உலக சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் வேலைத் திட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைநது ஒழுங்கு செய்திருந்த இவ்வேலைத்திட்டம், கல்முனை மாநகர சபை முன்றலில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.எம்.இஸ்ஹாக்கின் நெறிப்படுத்தலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜ/ன், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.பயாஸ், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எம்.அஹத், மேற்பார்வையாளர்களான எம். அத்ஹம், யூ.கே. காலிதீன், கல்முனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எம்.எம். அர்ஷாத், எம்.எம். றினா உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு நாட்கள் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வேலைத்திட்டத்தின் மூலம் வீடுகளிலும் பொது இடங்களிலும் பாவனைக்கு உதவாமல் ஒதுக்கி அகற்றப்பட்டுள்ள மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுகளை மாநகர சபையின் கழிவகற்றல் வாகனங்களில் சேகரித்து முறையாக அகற்றுவதன் மூலம் சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.எம்.இஸ்ஹாக் தெரிவித்தார்.



# ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்
# சூப்பர் ஓவரில் ஓமானை வீழ்த்திய நமிபியா!

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இன்று நடைபெற்ற ஓமான் அணிக்கு எதிரான போட்டியில் நமிபியா அணி சூப்பர் ஓவரில் வெற்றி பெற்றுள்ளது.

நமிபியா அணியும் ஓமான் அணியும் சம எண்ணிக்கையிலான ஓட்டங்களை பெற்றுக் கொண்டமையினால், போட்டி சூப்பர் ஓவர் வரை சென்றது. பார்படோஸ்'ில் இன்று நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நமிபியா அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.




முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ஓமான் அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஓமான் அணி சார்பில் காலித் கைல் 34 ஓட்டங்களை எடுத்திருந்தார். நமிபியா அணி சார்பில் பந்துவீச்சில் டிரம்பெல்மேன் 4 விக்கெட்டுக்களையும், டேவிட் விசே 3 விக்கெட்டுக்களையும் பெற்றுக்கொண்டனர். 110 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நமிபியா அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 109 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. நமிபியா அணி சார்பில் ஜான் பிரீலின்க் 45 ஓட்டங்களையும், நிகோலாஸ் டவின் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஓமான் அணி சார்பில் பந்துவீச்சில் மெஹ்ரான் கான் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டிசமநிலையில்நிறைவடைந்தமையினால் இரு அணிகளும் சூப்பர் ஓவரில் விளையாடியிருந்தன. சூப்பர் ஓவரில் நமிபியா அணி விக்கெட் இழப்பின்றி 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 22 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய ஓமான் அணி ஒரு விக்கெட்டினை இழந்து 10 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் நமிபியா அணி சூப்பர் ஓவரில் வெற்றியீட்டியதுடன், போட்டியின் ஆட்ட நாயகனாக நமிபியா அணியின் டேவிட் விசே தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி பங்குபற்றும் முதலாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் இலங்கை அணி தென்னாபிரிக்கா அணியை எதிர்கொள்ளவுள்ளது. இலங்கை நேரப்படி இரவு 8 மணிக்கு இந்தப்போட்டி ஆரம்பமாகவுள்ளது.

## மோசடி முறையில் உளுந்து இறக்குமதி!
## தரமற்ற உளுந்து விற்பனை அதிகரிப்பு

### நுகர்வோர் அதிகாரசபையிடம் முறைப்பாடு

நாட்டில் உளுந்து தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்ப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் உளுந்து இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு அரச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் புறக்கோட்டை சந்தையில் அதிகளவு உளுந்து கையிருப்பு எவ்வாறு உள்ளது என்பதை கண்டறியுமாறு அரச நிறுவனங்கள் நுகர்வோர் அதிகாரசபையிடம் முறைப்பாடு செய்துள்ளன.

அத்தியாவசிய உணவுப்பொருட்களை இறக்குமதி செய்கிறோம் என்ற போர்வையில் கொள்கலன்களில் மறைவாக அடைத்து (வரி செலுத்தாமல்) பல்வேறு இறக்குமதியாளர்களால் உளுந்து இறக்குமதி செய்யப்படுவதாலேயே சந்தையில் தேவைக்கும் அதிகமான உளுந்து கையிருப்பு இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. எனவே, குறித்த மொத்த வியாபாரிகளின் களஞ்சியசாலைகளை கண்காணிப்பிற்கு உட்படுத்துமாறு நுகர்வோர் அதிகார சபையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக அரசு நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உளுந்து விவசாயிகளை பாதிக்காத வகையில் அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் உணவு ஊக்குவிப்பு சபை என்பன தலா 500 மெற்றிக் தொன் உளுந்துவை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, மேற்படி அரச நிறுவனங்கள் உளுந்துவை இறக்குமதி செய்து அவற்றை விற்பனை செய்ய முற்படும்போது, புறக்கோட்டை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள களஞ்சியங்களில் ஏற்கனவே சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட பெருமளவு உளுந்து கையிருப்பில் உள்ள நிலையில், அரசு நிறுவனங்கள் கொண்டு வந்த உளுந்து தொகையை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சில மோசடி இறக்குமதியாளர்கள் தாம் விற்பனை செய்கின்ற உளுந்து அரச நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்டவை எனக் கூறி அவற்றை விற்பனை செய்வதாகவும், ஆனால் அவை உண்மையில் அரச நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படாத தரமற்ற உளுந்து எனவும் கண்டறியப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது .

எனவே, அனுமதியின்றி இறக்குமதி செய்யப்பட்ட உளுந்து களஞ்சியசாலைகளை பரிசோதித்து அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடுசெய்வதற்கும், குறித்த மோசடி வியாபாரிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அதிகாரசபைக்கு அரச நிறுவனங்களின் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெனா-01)

## ஐக்கிய தேசியக்கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லையாம்
## தேசிய மக்கள் சக்தியின் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை,என தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், ஐந்து வருடங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பிலேயே இந்த தீர்மானம் காணப்படுகின்றது.

எனவே, அரசியலமைப்பின் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிச்சயம் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை. அதுபோன்றே நாடாளுமன்றிலும் உறுப்பினர் ஒருவர் மாத்திரமே உள்ளார். தேர்தலில் தோல்வியடைவதை ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க நன்கு அறிவார், என்று தெரிவித்துள்ளார். (04)

## சுதந்திரக் கட்சியின் எதிர்கால அரசியல் செயற்பாடுகளை டார்லி வீதியில் மாற்று கட்டடத்தில் முன்னெடுக்கத் திட்டம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால அரசியல்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக டார்லி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு அருகாமையில் கட்டடமொன்றை பெற்றுக்கொள்வதற்கு சுதந்திரக் கட்சியின் மைத்ரிபால தரப்பினர் திட்டமிட்டுள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது கட்சிக்குள் நிலவும் அரசியல் நெருக்கடி மற்றும் சட்ட நிலைமைகள் காரணமாக சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் புதிய கட்டடத்திற்கு செல்ல இவர்கள் தீர்மானித்துள்ளதாக லக்ஷ்மன் பியதாச தலைமையில் நடைபெற்ற கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள்கூட்டத்தில்இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதன்படி அடுத்த சிலதினங்களில் கட்சியின் மாவட்ட, தொகுதி அமைப்பாளர்களுடன் புதிய கட்டடத்திலிருந்து எதிர்வரும் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதுடன், புதிய கூட்டணியில் இணையும் அனைத்து முற்போக்கு இடதுசாரி மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் கூட்டணி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

## சட்டமா அதிபரின் சேவை நீடிப்பிற்கு ஜனாதிபதி ரணில் பரிந்துரைப்பு

தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சே ராஜரத்தினத்திற்கு 6 மாதங்களுக்கு சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்துள்ளார்.

இதன்படி, இம்மாத நடுப்பகுதியில் ஓய்வுபெறவிருந்த சட்டமா அதிபர், இந்த வருட இறுதி வரை பதவியில் நீடிக்கக்கூடிய தகுதியைப் பெற்றுள்ளார். தற்போதைய பிரதம நீதியரசர் ஜெயந்த ஜயசூரியவும் ஓய்வு பெறவுள்ள நிலையில் சட்டமா அதிபரின் சேவை நீடிப்பு பார்க்கப்படுகின்றது.

தற்போதைய பிரதம நீதியரசர் சேவை நீடிப்பு இன்றி ஓய்வு பெற்றால், சேவை நீடிப்பு பெறுகின்ற சஞ்சே ராஜரத்தினம் தலைமை நீதிபதியாக நியமிக்க அதிக வாய்ப்பு உள்ளது எனவும் கருதப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெறவுள்ள நிலையில், நீதித்துறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவிருக்கும் நியமனங்கள் தொடர்பில் அரசியல்வட்டாரங்களில் பேசப்பட்டு

## இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது 2024

# கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் பிறந்த நாளை முன்னிட்டு வழங்கிவைப்பு





துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் 63 வது பிறந்த தினத்தை முன்னிட்டு "இளைய தலை முறை ஆற்றலாளர் 2024 விருது" வழங்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அன்னை பூரணி மண்டபத்தில் நடைபெற்றது

இதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி மற்றும் அண்மையில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனையாளர் 13 வயது மாணவன் கரிகரன் தனவந்த் ஆகியோர் "இளைய தலைமுறை ஆற்றலாளர் 2024 "விருதுகளை விருந்தினர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் நல்லூர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சிர்த்தார்த்தன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமாகிய பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் வைத்தியர் ஆர். சுரேந்திரகுமார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவர் கலாநிதி எஸ்.சபாஆனந், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவகெங்கா, ஆன்மீகச் சுடர் ரிசி தொண்டுநாத சுவாமிகள் மற்றும் தெல்லிப்பழை துர்க்கா தேவி மகளிர் இல்ல மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சிரமதான மற்றும் மரநடுகை நிகழ்வுகள்



(எம் எப். நவாஸ்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு "பயனுறுதிமிக்க நிலப்பயன்பாட்டின் ஊடாக நலம் நிறைந்த நாடு" எனும் தொனிப்பொருளின் கீழ் சுற்றாடல் வாரமானது கடந்த 30 ஆம் திகதி வரும் 5 ஆம் திகதி வரை அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

அதற்கமைய, உலக சுற்றாடல் தினத்தினை சிறப்பிக்கும் வகையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிஎம். இர்பானின் நெறிப்படுத்தலில், சுற்றாடல் அமைச்சின் கீழ் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிரின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மரநடுகை, பிரதேச செயலக உள்ளக கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழலை சுத்தம் செய்யும் பாரிய சிரமதான நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.




# கலாசாலையில் சுற்றாடல் தினம்




*கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித விஞ்ஞான மன்றம் நடத்தும் சுற்றாடல் தினத்தை ஒட்டிய கணித விஞ்ஞான உபகரணக் கண்காட்சியும் மரம் நாட்டு நிகழ்வும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜாவும் சிறப்பு விருந்தினராக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் த.சுபோகரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.*

# சர்வதேச சைக்கிள் ஓட்ட தினத்தை முன்னிட்டு மாபெரும் விழிப்புணர்வுச் சைக்கிளோட்டம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஜூன் 3 இல் அனுட்டிக்கப்படும் சர்வதேச சைக்கிள் ஓட்ட தினத்தை முன்னிட்டு கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகத்தினால் ஏற்பாடு செய்த சைக்கிளோட்ட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (02) காலை 7 மணிக்கு மருதமுனையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.



ரைடர்ஸ் கழகத்தின் தலைவர் கலீல் கபூர் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு சைக்கிளோட்டம் மருதமுனை பிரதான வீதியில் ஆரம்பமாகி, கல்முனை நகரை சென்று பின்னர் கல்முனை கடற்கரை பள்ளி செல்லும் பிரதான வளைவின் ஊடாக மீண்டும் கல்முனை நகர் வழியாக பாண்டிருப்பு, மருதமுனையை வந்தடைந்து பின்னர் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து தினமும் சைக்கிளை போக்குவரத்துக்காக பயன்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் மாலை அணிவித்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

இதில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர். எம்.அஸ்மி, டொக்டர் பௌஸாத் உட்பட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், ரைடர்ஸ் சைக்கிளிங் அணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதில் மருதமுனை பிரதேசத்திற்கு வெளியில் தூர இடங்களில் இருந்தும் பலர் வருகை தந்து கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் ஆரோக்கிய வாழ்வின் அவசியத்தை வலியுறுத்தி எல்லோருக்கும் இலைக் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த சைக்கிள் ஓட்ட நிகழ்வானது சைக்கிள் ஓட்டுதலை கொண்டாடுவோம் சைக்கிள் பாவனையை ஊக்குவித்தலால் ஆரோக்கிய சமூகத்தை உருவாக்குவதோடு மாசற்ற சுற்றுச்சூழலை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லும் முன்னோடிகளாவோம். ஆரோக்கியமான காபனற்ற பசுமையான பூமி கிரகத்தின் உருவாக்கத்தில் பங்காளிகளாகுவோம் எனும் கருப்பொருட்களை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# இடமாற்றம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு! வடக்கு மாகாண அரசசாரதிகள் போராட்டம்

வடக்கு மாகாண அரச சாரதிகள் தமக்கான இடமாற்றம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று முதல் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக இன்று திங்கட்கிழமை கூடிய அரச சாரதிகள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஐந்து வருடங்களாக தடைப்பட்டிருந்த சாரதிகளின் இடமாற்றமானது கடந்த வருடம் பிரதிப்பிரதம செயலாளரினால் (நிர்வாகம்) விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்ற பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஆளுநரின் கோரிக்கைக்கு இணங்க இடமாற்றம் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் ஏமாற்றம் அடைந்த அரச சாரதிகள் கடந்த பெப்ரவரி மாதம் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தனர். போராட்ட ஏற்பாட்டினைத் தொடர்ந்து ஜூன் முதலாம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்ட இடமாற்றமானது அமுல்படுத்தப்படுமென எழுத்து மூலமான உறுதி மொழியினை பிரதிப்பிரதம செயலாளர் (நிர்வாகம்) வழங்கியிருந்தார்.

குறித்த திகதியில் இடமாற்றம் நடைமுறைக்கு வராதநிலையில் வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தொடர்ச்சியாக 7 ஆம் திகதி வரை தொழிற்சங்கப் போராட்டத்தில் தாம் ஈடுபடவுள்ளதாக வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (O1)










## இலங்கை சாரணர் சங்கக் கொழும்புக் கிளை 110 வருடங்கள் நிறைவு சைக்கிள் சவாரி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை சாரணர் சங்கக் கொழும்புக்கிளையின் 110 வருடங்கள் நிறைவையொட்டி சைக்கிள் சவாரியொன்று அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மாவட்ட சாரணர் ஆணையாளர் அமில அபேசுந்தரவின் ஏற்பாட்டில் ஏனைய சாரணப் பிரதானிகள், குழுக்களின் ஒத்துழைப்போடு நடைபெற்ற இந்த சைக்கிள் சவாரியானது, தெஹிவளை புகையிரத நிலையத்துக்கு அருகில் ஆரம்பமாகி, சாரணர் சங்கத் தலைமைக் காரியாலயம் முன்பாக நிறைவடைந்தது.

இளைய மற்றும் மூத்த சாரணர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் இந்த சைக்கிள் சவாரியில் கலந்து கொண்டனர்.

## காத்தான்குடி குபா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான முகாம்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடி குபா விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் காத்தான்குடி அல் ஹிறா மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு குருதி வழங்கும் பொருட்டு இந்த இரத்ததான முகாம் இடம்பெற்றது.

குபா விளையாட்டு கழகத்தின் தலைவர் சுஜாத் அஹமத் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் இரத்த வங்கி வைத்திய அதிகாரி மற்றும் அதன் தாதியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்

காத்தான்குடி குபா விளையாட்டு கழகத்தின் செயலாளர் சுஜா உட்பட அதன் உறுப்பினர்களும், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் கலந்து


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD
DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
YOU CAN
EASILY
REGISTER
& ADD YOUR
VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!